மயிலாடுதுறை - மாவட்டம்

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

C

## ஆறாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 1. 30 மணி

## கணிதம்

மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **5×1=5**

1. 1 பில்லியனுக்குச் சமமானது ________.
   அ) 100 கோடி ஆ) 100 மில்லியன் இ) 100 இலட்சம் ஈ) 10,000 இலட்சம்
2. 3 + 5 - 7 × 1 இன் மதிப்பு ________.
   அ) 5 ஆ) 7 இ) 8 ஈ) 1
3. ஓர் எண்ணை ________ ஆல் பெருக்கும் போது அந்த எண் மாறாமல் இருக்கும்.
   அ) 102 ஆ) 0 இ) 1 ஈ) 53 + 49 x 0
4. மாறி என்பதன் பொருள்
   அ) சில மதிப்புகளை மட்டும் ஏற்கக் கூடியது ஆ) நிலையான மதிப்பைக் கொண்டது
   இ) வேறுபட்ட மதிப்புகளை ஏற்கக் கூடியது ஈ) 8 மதிப்புகளை மட்டும் ஏற்கக் கூடியது
5. முக்கோணம் மற்றும் செவ்வகத்தின் பக்கங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையேயுள்ள விகிதம்
   அ) 4:3 ஆ) 3:4 இ) 3:5 ஈ) 3:2

**II. சரியா தவறா எனக் கூறுக:** **5×1=5**

6. முழு எண்களின் கூட்டலின் மீதான பெருக்கல் பங்கீட்டுப் பண்புடையது.
7. நான்கு இலக்க எண்களின் மொத்த எண்ணிக்கை 9000.
8. 'q' மற்றும் 20 இன் பெருக்கற்பலன் '20q'.
9. 7 நபர்களுக்கும் 49 நபர்களுக்கும் உள்ள விகிதமும், 11 கிகி எடைக்கும் 88 கிகி எடைக்கும் உள்ள விகிதமும் விகித சமத்தை அமைக்கும்.
10. 5:7 என்பது 21 : 15 இக்குச் சமான விகிதம் ஆகும்.

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **5×1=5**

11. மிகப்பெரிய எட்டு இலக்க எண் ________.
12. ________ ஆல் வகுப்பது என்பது வரையறுக்கப்படவில்லை.
13. 'w' வாரங்களில் உள்ள நாள்களின் எண்ணிக்கை ________
14. a, b, c, .......x, y, z, ஆகிய எழுத்துக்கள் ________ குறிப்பதற்குப் பயன்படுகின்றன.
15. 3 : 5 = 9 : ________.

**IV. ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் :** **10×2=20**

1. காற்புள்ளியைப் பயன்படுத்திப் பின்வரும் எண்களைப் பன்னாட்டு முறையில் எழுதுக.
   1 2 3 4 5 6 7 8 9 0
2. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் ஏறக்குறைய 92900000 மைல்கள். இதனை இந்திய எண்முறையில் காற்புள்ளியைப் பயன்படுத்தி எழுதுக.
3. அடிக்கோடிட்ட இலக்கத்தின் இடமதிப்பைக் காண்க.

S. GEETHA . B.T. Asst . G.G.H.S. School - Manalmedu

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



i) 3841567 ii) 9443810

4. முழு எண்களின் பண்புகளைப் பயன்படுத்திச் சுருக்குக : i) 50 x 102
5. 'u' என்பது இரட்டை எண் எனில் பின்வருவனவற்றை எவ்வாறு குறிப்பிடுவாய்?
i) 'u' இன் அடுத்த இரட்டை எண் எது? ii) 'u' இன் முந்தைய இரட்டை எண் எது?
6. பின்வரும் வாய்மொழி கூற்றினை இயற்கணிதக் கூற்றாக மாற்றுக :
'y' இன் 9 மடங்கிலிருந்து 4 ஐக் குறைக்க.
7. ஒரு கம்பியின் நீளம் '12s' செ.மீ அதைப் பயன்படுத்திப் பின்வரும் வடிவங்களை உருவாக்கினால் அவற்றின் பக்கங்களின் நீளத்தைக் காண்க : i) சதுரம்
8. விகிதங்களுக்கு எளிய வடிவம் காண்க: 75 : 100.
9. 40 நிமிடத்திற்கும் 1 மணி நேரத்திற்கும் இடையே உள்ள விகிதத்தைக் காண்க.
10. அகிலன் 1 மணி நேரத்தில் 10 கி.மீ நடக்கிறான். செல்வி 1மணி நேரத்தில் 6கி.மீ நடக்கிறாள் எனில், அகிலன் மற்றும் செல்வி நடந்த தொலைவுகளுக்கு இடையே உள்ள விகிதத்தைக் காண்க.
11. என்னுடைய பூட்டப்பட்ட பெட்டியைத் திறக்க பயன்படும் கடவுச் சொல்லானது மிகப்பெரிய 5 இலக்க ஒற்றை எண் ஆகும். இது 7,5,4,3 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்டது. எனில் அக்கடவுச் சொல்லைக் கண்டறிக.
12. 5598 ÷ 689 இன் உத்தேச மதிப்பைக் காண்க.

**V. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி : 5×3=15**

13. முல்லைக்கொடி, ஒவ்வொரு பையிலும் 9 ஆப்பிள்கள் கொண்ட 25 பைகள் வைத்திருந்தாள். அவளுடைய 6 நண்பர்களுக்கு அவற்றைச் சமமாகப் பங்கீட்டுக் கொடுத்தாள் எனில், ஒவ்வொரு நண்பரும் எத்தனை ஆப்பிள்களைப் பெற்றிருப்பர்? ஆப்பிள்கள் மீதமிருக்க வாய்ப்புண்டா? உண்டெனில் எத்தனை?
14. 157826 மற்றும் 32469 இன் கூட்டலைப் பத்தாயிரத்திற்கு முழுமையாக்கி உத்தேச மதிப்பு காண்க.
15. ஒரு பொருட்காட்சியில் 1 ஆவது 2 ஆவது 3 ஆவது மற்றும் 4ஆவது நாள்களில் விற்ற நுழைவுச்சீட்டுகளில் முறையே 1,10,000, 75,060 25,700, 30,606 மற்றும் 4 நாள்களிலும் மொத்தமாக விற்பனை செய்யப்பட்ட மொத்த நுழைவுச்சீட்டுகள் எத்தனை?
16. கோபால் கர்ணனை விட 8 வயது இளையவன். அவர்களின் வயதுகளின் கூடுதல் 30 எனில் கர்ணனின் வயது என்ன?
17. அறிவழகன் அவரது தந்தையை விட 30 வயது இளையவன். அறிவழகனின் வயதை அவரது தந்தையின் வயதைக் கொண்டு எழுதவும்
18. பாரி, 5 இறகுப் பந்துகளை ஒரு விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடையில் வாங்க விரும்புகிறான். ஒரு பெட்டி (12 பந்துகள்) பந்துகளின் விலை ரூ.180 எனில், பாரி 5 பந்துகளை வாங்க எவ்வளவு தொகை செலுத்த வேண்டும்?
19. குமரனிடம் ரூ. 600 உள்ளது. அதனை விமலாவிற்கும் யாழினிக்கும் 2:3 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கிறார். இருவரில் யாருக்கு அதிகத் தொகை கிடைக்கும்? எவ்வளவு?

---------

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com